THE CENTER FOR JUSTICE & ACCOUNTABILITY
Bringing Human Rights Abusers To Justice.

# புகழ்பெற்ற ஊடகவியலாளரை இலக்கு வைத்தமை மற்றும் கொலை செய்தமைக்காக இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் புதல்வி அவருடைய தந்தையை இலங்கையில் கொலை செய்தமைக்காக அவருடைய பத்தாம் ஆண்டு நினைவு தினத்தன்று கோதாபய ராஜபக்ஷவிற்கு எதிராக வழக்கு பதிவு செய்துள்ளார்.


**<u>ஊடக தொடர்புகளுக்கு</u>**
**Lisa Cohen**
**(310) 395-2544**
**lisa@lisacohen.org**


**சென் பிரான்சிஸ்கோ, கலிபோர்னியா, ஏப்ரல், 2019-** நீதி மற்றும் பொறுப்புக்கூறுதலுக்கான நிலையமானது (The Centre for Justice and Accountability (CJA)) விருது பெற்ற ஊடகவியலாளரான லசந்த விக்கிரமதுங்கவின் நிதிமுறைக்கு புறம்பான கொலை மற்றும் ராஜபக்ஷ அரசாங்கத்தில் முக்கியமானதொன்றாகக் காணப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான பரவலான மற்றும் திட்டமிடப்பட்ட அடக்குமுறை என்பனவற்றில் இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோதாபய ராஜபக்ஷவிற்கு காணப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்ற அவரது வகிபங்கிற்கு எதிராக வழக்கொன்றினைப் பதிவு செய்துள்ளது. 2019 ஏப்ரல் 4 ஆம் திகதி பதியப்பட்ட இச்சிவில் முறையீடு இன்று கலிபோர்னிய மத்திய மாவட்டத்திற்கான ஐக்கிய அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தில் கூட்டரசு நீதிபதியொருவரால் எடுத்துக்கொள்ளப்பட்டது. ராஜபக்ஷ ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இரட்டைக்குடியுரிமையினைக் கொண்டவர் என்பதுடன், அவர் ஐக்கிய அமெரிக்காவின் குடியுரிமையினைப் பெற்ற பின்னர் இலங்கையின் பாதுகாப்பு செயலாளராகக் கடமையாற்றியிருந்தார்.

CJA ஆனது லசந்தவின் புதல்வியான அஹிம்சா விக்கிரமதுங்கவின் சார்பில் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளது. லசந்த தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, இலங்கையில் அக்கொலை குறித்து நம்பகத்தன்மையுடன் விசாரிப்பதற்கான முயற்சிகள் தலையீடுகள் மற்றும் தாமதத்தினைச் சந்திக்க நேர்ந்தது. ஒரு தசாப்தத்திற்கு பின்னர், தற்போதுவரையில் அவருடைய மரணத்திற்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக எவ்வித குற்றச்சார்த்துகைகளும் பதிவு செய்யப்படவில்லை. "பத்திரிகை சுதந்திரத்திற்கான அர்ப்பணிப்பினைக் கொண்டிருந்த ஒரு ஊடகவியலாளர் என்பதனால்தான் என்னுடைய தந்தை கொல்லப்பட்டார். இவ்வழக்கு ஒரு சிவில் விடயமாக இருந்தபோதிலும், என்னுடைய தந்தை எவ்வாறு கொல்லப்பட்டார் மற்றும் அவரைக் கொலை செய்யக் கட்டளையிட்டவர்கள் யார் என்பதனை நீதிமன்றத்தினூடாக இவ்வுலகிற்கு அறியப்படுத்துவதே என்னுடைய பிரதான நோக்கமாக உள்ளது. இலங்கையிலுள்ள பொலிஸாரால் உறுதியான விசாரணைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும்கூட, இதுவரையில் நீதி அணுகப்படுதலை அரசியல் காரணிகள் தடுத்து வருகின்றன" என அஹிம்சா கூறுகின்றார்.

CJA இன் சிரேஷ்ட பணியாளரான சட்டத்தரணி Nushin Sarkarati, "இலங்கையில் சுதந்திரமான மற்றும் சுயாதீனமான பத்திரிகைத்துறையினை அடக்குவதற்காக ராஜபக்ஷ நிர்வாகத்தில் பிரயோகிக்கப்பட்ட ஒரு கருவியாக ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறை காணப்பட்டது என்பதுடன் இத்தகைய துஷ்பிரயோகங்களுக்கான தண்டணையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரம் இன்றுவரையில் நிலைத்திருக்கின்றது. இலங்கையிலும் இதுபோன்ற வழக்குகள் தொடரப்படவேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் இப்போது நாங்கள் ஐக்கிய அமெரிக்க நீதிமன்றங்களில் உண்மையினை நாடுகின்றோம்" என கூறினார்.

கோதாபய ராஜபக்ஷ 2005 தொடக்கம் 2015 வரை, அதாவது அவருடைய சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதி முழுவதிலும் இலங்கையின் பாதுகாப்பு செயலாளராகக் கடமையாற்றினார். தசாப்தங்களாக நிலைத்திருந்த இலங்கையின் சிவில் யுத்தத்தின் இறுதி கட்டத்தின்போது ராஜபக்ஷ அரசாங்கமானது யுத்த முயற்சியினை விமர்சித்தவர்களுக்கு எதிராக சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதுடன் பத்திரிகை சுதந்திரத்தை தாக்க ஆரம்பித்தது.

அத்தகைய பாதிக்கப்பட்டவருள் ஒருவராக பாராட்டுபெற்ற ஊடகவியலாளரான லசந்த விக்கிரமதுங்க காணப்படுகின்றார். இவர் இலங்கையின் தலைநகரமான கொழும்பில் 2009 ஜனவரி 8 ஆம் திகதியன்று முகமூடி தரித்திருந்த தாக்குநர்களால் கொல்லப்பட்டார். அவர் தன்னுடைய கொலைச்சம்பவத்தின்போது வெளியிடப்படுவதற்காக ஒரு இறுதி ஆசிரியர் கட்டுரையினை எழுதியிருந்தார். அவருடைய ஈமச்சடங்கு உலகம் முழுவதிலுமிருந்து அனுதாபங்களை ஈர்த்துக்கொண்டது. அவருடைய கொலையினைக் கண்டித்து கருத்து தெரிவித்தல் சுதந்திரந்திற்காக வாதாடுகின்ற ஒழுங்கமைப்புக்கள் மற்றும் அதுபோன்ற அரசாங்கங்கள் அறிக்கை வெளியிட்டிருந்தன. யுத்தத்தின்போது சிரேஷ்ட அதிகாரிகளினால் இடம்பெற்ற அரசாங்க ஊழல் மற்றும் இழைக்கப்பட்ட துஷ்பிரயோகங்கள் என்பனவற்றை வெளிப்படுத்துவன என அறியப்பட்ட லசந்தவின் ஆக்கங்கள் ராஜபக்ஷ ஆட்சியிலிருந்து விமர்சனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை ஈர்த்துக் கொண்டன. கோதாபய ராஜபக்ஷவின் கட்டளையின்கீழ் செயற்பட்ட பாதுகாப்பு படைகளின் உறுப்பினர்களே லசந்தவின் கொலைக்கு பொறுப்பானவர்கள் மற்றும் கோதாபய ராஜபக்ஷவின் அதிகாரத்தின்கீழ் லசந்தவின் கொலை தொடர்பான ஆரம்பகட்ட விசாரணைகள் பொலிஸ் திணைக்களத்தினரின் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மூடி மறைத்தல்களினால் தடைப்பட்டதென அம்முறைபாட்டில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கோதாபய ராஜபக்ஷ அவருடைய குடும்பத்தினரைச் சந்திப்பதற்காக ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்றிருந்தபோது, 7 ஏப்ரல் 2019 அன்று லொஸ் ஏஞ்சலில் அவருக்கான நீதிமன்ற அழைப்பாணை மற்றும் அஹிம்சாவின் முறைபாட்டின் பிரதி என்பன அவருக்கு நேரடியாக வழங்கப்பட்டன. அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகைகளுக்கு பதிலளிப்பதற்கு அவருக்கு 29 ஏப்ரல் 2019 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தன்னுடைய தந்தை சார்பான அஹிம்சாவின் வழக்கு Schonbrun Seplow Harris மற்றும் Hoffman மற்றும் Mintz Group மற்றும் Ideal Investigations போன்றோரின் ஆதரவுடன் பதியப்பட்டுள்ளது.

முறைப்பாட்டிற்கான இணைப்பு உள்ளடங்கலாக இவ்வழக்கு பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு இதனைப் பார்க்க: https://cja.org/what-we-do/litigation/wickrematunge-v-rajapaksa/

**

**நீதி மற்றும் பொறுப்புக்கூறுதலுக்கான நிலையத்தைப் பற்றி**

நீதி மற்றும் பொறுப்புக்கூறுதலுக்கான நிலையமானது (The Centre for Justice and Accountability (CJA)) சென் பிரான்சிஸ்கோவினைத் தழுவிய மனித உரிமைகள் சட்ட ஒழுங்கமைப்பொன்றாகும் என்பதுடன் அது உலகம் முழுவதிலும் இடம்பெறுகின்ற சித்திரவதை, யுத்தக்குற்றங்கள், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் ஏனைய பாரதூரமான மனித உரிமை துஷ்பிரயோகங்கள் என்பனவற்றை உலகளாவியரீதியில் பொறுப்புக்கூறுதல் வலைப்பின்னலைப் பலப்படுத்துகின்ற புத்தாக்க சட்டவாக்கங்கள், கொள்கைகள் மற்றும் நிலைமாறுகால நீதி உபாயங்களினூடாகத் தடுப்பதற்கான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளது. உண்மை, நீதி மற்றும் நிவாரணம் என்பனவற்றை அடைந்துகொள்ளும்பொருட்டு CJA ஆனது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் எஞ்சியிருப்பவர்களுடன் இணைந்து பணியாற்றுவதுடன் அது சோமாலியாவில் Siad Barre இன் ஆட்சியின்போது பணியாற்றிய பாதுகாப்பு அமைச்சர், சிலியின் செயற்பாட்டாளரும் பாடகருமான Victor Jara என்பவரின் கொலைக்கு பொறுப்பான இராணுவ அதிகாரி மற்றும் யுத்த நிருபரான Marie Colvin இனுடைய இலக்கு வைக்கப்பட்ட

கொலைக்காக சிரியாவின் Assad ஆட்சி என்போருக்கு எதிராக வெற்றிகரமாக வழக்குகளை கொண்டுவந்துள்ளது. இனைப் பார்க்க: [www.cja.org](http://www.cja.org).

**ஐக்கிய அமெரிக்காவின் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான சட்டம் மற்றும் மனித உரிமை துஷ்பிரயோகங்களுக்கான சிவில் வழக்குகள் பற்றிய மேலதிக விபரங்கள்**

கோதாபய ராஜபக்ஷவிற்கு எதிரான CJA இன் வழக்கு இலங்கையில் ஏற்கனவே புரியப்பட்டுள்ள நீதிக்கு புறம்பான கொலைகள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற குற்றச்சாட்டுகைகளைக் கொண்டுள்ளது. இக்குற்றச்சாட்டுக்கள் Torture Victim Protection Act (சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான சட்டம்) மற்றும் Alien Tort Statute (வெளியாட்களுக்கு இழைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்கான நியதிச்சட்டம்) போன்ற இரு கூட்டரசு சட்டவாக்கங்களின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்நியதிச் சட்டவாக்கங்கள் பாரதூரமான மனித உரிமை துஷ்பிரயோகங்களை புரிந்தோர் ஐக்கிய அமெரிக்காவில் பாதுகாப்பாக இருப்பதற்கு எத்தனிக்கின்றபோது அல்லது அங்கு பிரசன்னமாகியுள்ளபோது அக்குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் ஐக்கிய அமெரிக்க நீதிமன்றங்களிலிருந்து நிவாரணத்தினை நாடுவதனை அனுமதிக்கின்றது.

1991 இல் நிறைவேற்றப்பட்ட சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான சட்டமானது ஐக்கிய அமெரிக்க பிரஜைகள் மற்றும் பிரஜைகளல்லாதோர் வெளிநாடுகளில் இடம்பெற்ற சித்திரவதை மற்றும் நீதிக்கு புறம்பான கொலைகள் போன்றன தொடர்பான குற்றச்சாட்டுக்களை கொண்டு வருவதனை அனுமதிக்கின்றது. வெளியாட்களுக்கு இழைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்கான நியதிச்சட்டத்தினைப்போன்று, சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான சட்டமும் இத்தகைய துஷ்பிரயோகங்களை புரிந்த குற்றவாளிகள் பிரசன்னமாகியுள்ளபோது அல்லது ஐக்கிய அமெரிக்காவின் நியாயாதிக்கத்திற்குள் காணப்படுகின்றபோது ஐக்கிய அமெரிக்க நீதிமன்றங்களில் சிவில் வழக்குகள் (குற்றவியல் வழக்குகளைக் காட்டிலும்) பதிவு செய்யப்படுவதனை அனுமதிக்கின்றது. சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து அது வெளிநாட்டு இராணுவ அதிகாரிகள், அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட ஆயுதக்குழு உறுப்பினர்கள் என்போரை மனித உரிமை துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்பாக்கியுள்ளது. இச்சட்டம் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு இதனைப் பார்க்க: [https://cja.org/what-we-do/litigation/legal-strategy/torture-victim-protection-act/](https://cja.org/what-we-do/litigation/legal-strategy/torture-victim-protection-act/)

1789 இல் ஆக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க கூட்டரசு சட்டமான வெளியாட்களுக்கு இழைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்கான நியதிச்சட்டமானது, குற்றங்கள் எங்கு இழைக்கப்பட்டன என்பதனைப் பொருட்படுத்தாது, குற்றவாளிகள் ஐக்கிய அமெரிக்காவின் நியாயாதிக்கத்திற்குள் காணப்படுகின்றபோது, சர்வதேச மனித உரிமைகள் துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்கள் ஐக்கிய அமெரிக்க நீதிமன்றங்களில் குற்றவாளிகளுக்கெதிராக வழக்குத் தொடர்வதனை அனுமதிக்கின்றது. ஆரம்பத்தில், இச்சட்டவாக்கமானது நாடு கடந்து புரியப்படுகின்ற கடற்கொள்ளை போன்ற குறிப்பிட்ட குற்றங்களுக்கான நியாயாதிக்கத்தினை மாத்திரமே கொண்டிருந்தது. எவ்வாறெனினும், 1980 ஆம் ஆண்டு நவீன காலத்தில் “சித்திரவதை” கடற்கொள்ளைக்கு சமமானதொன்றாக, அனைத்து மனிதர்களினதும் எதிரியாக தோற்றம்பெற்றுள்ளதென தீர்மானித்த ஐக்கிய அமெரிக்க நீதிமன்றம் அவை இங்கு கண்டறியப்படும்போது ஐக்கிய அமெரிக்க நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்கு உட்பட வேண்டுமென தீர்மானித்தது. அடிமைத்தனம், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், யுத்த குற்றங்கள் மற்றும் இன படுகொலை போன்றன உள்ளடங்கலாக சர்வதேச சட்டத்தின் மீறல்கள் தொடர்பாக வழக்கு தொடர்வதற்கு வெளியாட்களுக்கு இழைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்கான நியதிச்சட்டம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சட்டம் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு இதனைப் பார்க்க: [https://cja.org/what-we-do/litigation/legal-strategy/the-alien-tort-statute/](https://cja.org/what-we-do/litigation/legal-strategy/the-alien-tort-statute/).